# அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் A+ (CGPA:3.64) தகுதி பெற்றது)

**காரைக்குடி – 630 003**

நாள்:02.10.2018

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக காந்தி கல்வி மையத்தின் சார்பில் தேச பிதா மகாத்மா காந்தி அவர்களின் 150-வது பிறந்தநாள் விழா மற்றும் சர்வதேச அகிம்சை தினம் இன்று (02.10.2018) பல்கலைக்கழக கருத்தரங்க அறையில் நடைபெற்றது.




பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா.நா.இராஜேந்திரன் இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில், அமைதி மற்றும் அகிம்சை மூலம் நாட்டின் சமூக மற்றும் அரசியல் சுதந்திரத்தை பெற முடியும் என உலகிற்கு நிருபித்த முதல் தலைவர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். எனவே அவரின் பிறந்த தினமான அக்டோபர் - 2-ஆம் தேதியை சர்வதேச அகிம்சை தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது எனக் குறிப்பிட்டார். மக்களின் அரசியல் சுதந்திரம் மற்றும் சமூக-பொருளாதார சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டவர் காந்தியடிகள் என்றார். இந்திய சுதந்திர வரலாற்றில் 1930 மார்ச்-2-ஆம் தேதி காந்தியடிகள் 72 தொண்டர்களுடன் பத்தாயிரம் கிராமங்களை கடந்து சுமார் 240 மைல் தூரம் பயணம் சென்று தண்டி யாத்திரை மேற்கொண்டது இந்திய விடுதலை போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்றார். மேலும் காந்தியடிகள் 20 முறை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்துள்ளார் என்றும், அவற்றில் மதுரைக்கு ஐந்து முறை வந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு மதுரைக்கு வந்த போது மக்களின் வறுமை நிலையை கண்டு தான் அணிந்திருந்த மேலாடையை களைந்து விட்டு துண்டு மற்றும் வேட்டி அணிந்தார் என்று குறிப்பிட்டார். எனவே மாணவர்கள் காந்தியின் அறவழி மற்றும் கோட்பாடுகள் பின்பற்றி வளமான மற்றும் தூய்மையான இந்தியாவை உருவாக்க பாடுபட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக காந்தீய சிந்தனைத் துறைப் பேராசிரியர் முனைவர்.வில்லியம் பாஸ்கரன் அவர்கள் "இன்றைய காலகட்டத்தில் காந்திஜீயின் விழுமியங்கள் மற்றும் செயல்முறைகளை பின்பற்றுவதன் தேவை" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் காந்திஜீயின் உண்மையும், அன்புமே சுதந்திரத்திற்கு வழிவகுத்தது என்றார். மனித உடல் உழைப்பு அவசியம் எனக்குறிப்பிட்டார். மக்களிடையே மாற்றத்தை கொண்டு வருவதற்கு நாம் முதலில் மாற வேண்டும். வரலாறு படிப்பது மிகவும் அவசியமானது. வரலாறு தெரியாதவர்கள் மீண்டும் மீண்டும் தவறு செய்து கொண்டிருப்பார்கள். உலக வரலாற்றில் புரட்சிக்கு தலைமை ஏற்றவர்கள் எல்லாம் தலைவர்களாக உருவாகினார்கள். ஆனால் காந்தியடிகள் அவ்வாறு இல்லை, காந்தியடிகளை அரசியல் தலைவராக மட்டும் பார்க்காமல் சமூக, பொருளாதார விடுதலைக்கான தலைவராகவும் பார்க்க வேண்டும் என்றார். காந்தியடிகள் மனித உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். காந்தியடிகளின் கொள்கைகளையும் அவரது கருத்துக்களையும் மாணவர்கள் கற்றறிந்து அவற்றை பின்பற்றினால் அமைதியான உலகம் சாத்தியம் என்றார். அதற்காக காந்தீய சிந்தனையை அழகப்பா பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் சேர்க்க துணைவேந்தரை கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கிய கல்வியியல் புல முதன்மையர் முனைவர் பூ.தர்மலிங்கம் அவர்கள், உலகத்தில் முதன்முதலில் நீரைப் பயன்படுத்தி ஃபிளஸ் கழிப்பிடம் பயன்படுத்திய இந்திய சமூகமானது உலகத்தில் கழிப்பறை வசதி இல்லாத நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கிறது என்றார். எனவே தான் மகாத்மா காந்தியடிகள் ‘‘சமூக மாற்றத்தின் மிக முக்கியமான கருவியாக கழிப்பறையை சுத்தம் செய்தலை கருதினார். மேலும் ஒரு சமூகத்தின் உண்மையான சுதந்திரம் மற்றும் பெருமை பொது மற்றும் தனி மனித சுகாதாரம் குறித்தான பார்வையில் அடங்கியிருக்கிறது என்றார்’’. அழகப்பா பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் சார்பாக திரு.அவந்த்ராஜ் தலைமையிலான குழுவினர் காந்தியடிகள் குறித்த பஜனைப்பாடல்களை பாடினர்.

முன்னதாக அழகப்பா பல்கலைக்கழக காந்தி கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.பாலு அனைவரையும் வரவேற்றார். உதவி பேராசிரியர் முனைவர் உ.ஆறுமுகம் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் கல்வியியல் மற்றும் உடற்கல்வியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேரா.ஹா.குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்